<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 20.08.2025 அ.வ.எண்.237/2020 வா.சா.2. ஜெயந்தி க/பெ.ரவிக்குமார்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. ஆதியில் இந்த தாவாவை எனது தகப்பனார் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு வாரிசு என்ற கோதாவில் வழக்கு நடத்திவருகிறேன் என்றால் சரிதான். இறந்து போனவருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு உரிமைதாரர் என்ற உரிமையில் வழக்கு நடத்தவில்லை என்றால் சரியல்ல. உரிமையின் அடிப்படையிலும் நடத்தி வருகிறேன். மேற்படி விபரங்களை என்னுடைய திருத்தல் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும் திருத்தல் பிராதில் அதுபோன்ற சங்கதிகள் இல்லை என்றால் சரியல்ல.

2. மேற்படி வழக்கை எனது தகப்பனார் என்ன பரிகாரத்திற்காக நடத்தி வந்தார் என்றால் காம்பவுண்ட் சுவரை இடிக்க விடாததாலும், மூலபத்திரத்தில் காம்பவுண்ட் சுவரையும் தாண்டி 5 அடிக்கு மேபுறத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது. மேற்படி இடத்தை நாங்கள் பயன்படுத்துவதை தடை செய்ததால் வழக்கு தாக்கல் செய்தார். எனக்கு எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்கை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் எனது தகப்பனார் கூறினார். பிரதிவாதிகளுக்கு எதிராக நாங்கள் பரிகாரம் ஏதேனும் கேட்டுள்ளோமா என்றால் கேட்டுள்ளோம்.

3. பிரதிவாதிகள் தொந்தரவு செய்ததால்தான் இந்த வழக்கை எனது தகப்பனார் தாக்கல் செய்தார் என்றால் இடத்தை பயன்படுத்துவதில் தடை செய்தார்கள். எனது அப்பா இறந்ததற்குப்பின்னிட் தற்போது இந்தப் பிரதிவாதிகள் எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றால் சரியல்ல தற்போதும் தொந்தரவு செய்கிறார்கள்.

ஒப்பம்/– (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

மேற்படி விபரங்களை என்னுடைய திருத்தல் பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தொந்தரவு செய்தது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் அப்பா கொடுத்துள்ளார். எனது அப்பா இறப்பிற்குப்பின்னிட்டு நான் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் என்னப் பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் குருவம்மாளின் மூலப் பத்திரப்படி அளவுள்ள பூமி வேண்டும். 2005 ஆம் ஆண்டு தீர்ப்பின் அடிப்படையிலும் வடபுறம் ஊர் நத்தம், கிழபுறம் தார் ரோடு, தென்புறம் வீதி, மேபுறம் எம்.ஏ.நாச்சிமுத்து செட்டியாரின் வீட்டிற்கும் காலியிடத்திற்கும் கிழக்கு என்ற நான்கு எல்லை கொண்ட அளவுகள் நிலம் வேண்டும் என்று வழக்கு போடப்பட்டுள்ளது.

4. மேலும் பிரதிவாதிகள் எங்களுடைய ஜன்னல் மற்றும் சன்சேட் ஆகியவற்றை இடித்துவிட்டார்கள் அதை அவர்கள் சரிசெய்து கொடுக்கவேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளோம். இந்த விபரங்களை எனது பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா ஏ, பி அட்டவணை சொத்துக்கள் மட்டும்தான் எனக்கு பாத்தியம் என்றால் தாவா ஏ, பி, சி அட்டவணை சொத்துக்கள் முழுவதும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள். இந்த சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும் ஏ, பி அட்டவணை சொத்திற்கு மட்டும் தான் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சி அட்டவணை சொத்திற்கும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

ஒப்பம்/– (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.,

5. அதேபோல் தாவா டி அட்டவணை சொத்திற்கும் நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. டி அட்டவணை சொத்தில் சொல்லியுள்ள விவரத்திற்கு ஏதேனும் ஆதரவு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் வைத்துள்ள கோரிக்கைகள் குருவம்மாள் பத்திரப்படி உள்ள சொத்திற்கு தான் கட்டுப்படும் என்றால் சரிதான். எங்களது சொத்திற்கு தொட்டாற்போல் மேபுறம் பிரதிவாதிகள் வீடு உள்ளது என்றால் காலியிடம் உள்ளது. அந்த காலியிடத்திற்கு வடபுறம் தெற்கு பார்த்த ஓடு போட்ட வீடு உள்ளது என்றால் எங்களுக்கும் அந்த சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. பிராதில் சி அட்டவணையில் கண்டுள்ள சக்குப்பந்திக்குள் உள்ள சொத்துதான் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் ஏ, பி, சி மூன்றுமே எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். எம்.ஏ.நாச்சிமுத்து செட்டியார் தற்பொழுது பிரதிவாதிகள் வீட்டிற்கும் தெற்கு, தென்வடல் மெயின்ரோட்டிற்கும் மேற்கு எம்.ஏ.நாச்சிமுத்து செட்டியார் தற்பொழுது பிரதிவாதிகள் வீட்டிற்கும் கிழக்கு, கிழமேல் வீதிக்கும் வடக்கு இந்த சக்குப்பந்திக்குள்தான் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் எம்.ஏ.நாச்சிமுத்து செட்டியார் வீட்டிற்கும், காலியிடத்திற்கும் கிழக்கு இதுதான் சரியான சக்குப்பந்தியாகும்.

6. நான் கூறியுள்ளது போல் பிராதில் சக்குப்பந்திகள் கூறவில்லை என்றால் சரியல்ல. சி அட்டவணை சொத்தில் கிழமேல் நீள அகலங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் சதுர மீட்டரில் மொத்த அளவுகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2005 ஆம் ஆண்டு தீர்ப்பில் 156 சதுர மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விபரங்களை நான் எனது

ஒப்பம்/– (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.,

பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. 2005 ஆம் ஆண்டு தீர்ப்புரையை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல.

7. மேற்படி ஏ, பி, சி அட்டவணை சொத்தில் குறிப்பாக தென்வடல் சுற்றுச் சுவர் குறித்து குறிப்பிடவில்லை என்றால் கூறியுள்ளேன். சுற்றுச் சுவரை தொட்டு எங்களுக்கு இடம் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது மூலப்பத்திரத்தில் உள்ளது. எனது தகப்பனார் 27.11.2014 ல் கிரயம் பெற்ற பத்திரத்திலும் சுற்றுச் சுவர் பற்றி குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. நானாகவே சி அட்டவணை சொத்து விபரத்தில் குறிப்பாக தென்புறம், வடபுறம், மேபுறம் உள்ள காம்பவுண்ட் சுவர் என்று குறிப்பிட்டு வழக்கு தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. குருவம்மாளின் மூலப்பத்திரத்தில் நான் சொல்லும் உரிமைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

8. குறிப்பாக டி அட்டவணை சொத்தானது இந்தப் பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. டி அட்டவணை சொத்து எங்களுக்குப் பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மூலப்பத்திரத்திலேயே வந்துள்ளது. எனது தகப்பனார் தாக்கல் செய்த பிரமாணப்பத்திரிக்கையின் அடிப்படையில்தான் வழக்கு என்றால் சரிதான். பின்னிட்டு நானும் பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இருவரின் பிரமாணப்பத்திரிக்கையிலும் பத்தி 7 ல் சொல்லியுள்ள சக்குப்பந்தி படிதான் பூமி உள்ளது என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.,

9. மேற்படி இருவரின் பிரமாணப்பத்திரிக்கையிலும் பத்தி 8 ல் சொல்லியுள்ள சங்கதிகளில் பத்திரங்களின் மூலம் உரிமைகள் ஏற்படவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நீதிமன்றஆணையர் வந்து பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின் படி தான் தற்பொழுது தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். நீ.ம.சா.ஆ.1 அடிப்படையில்தான் எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

10. நீ.ம.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள ந.பு.எ.460/7 எங்களுக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதற்கு வடபுறம் ந.பு.எ.460/6 யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் சின்னநாச்சிமுத்துவுக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்படி சின்னநாச்சிமுத்து யார் என்றால் பிரதிவாதிகளின் தகப்பனார் ஆவார். ந.பு.எ.460/7 அதை தொட்டு மேபுறம் 460/4 என்பது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் தவறாகும். ந.பு.எ.460/7 ல் தார்சு வீடு கட்டியுள்ளோம் என்றால் சரிதான். பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுதான் கட்டியுள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். ந.பு.எ.460/7 ல் தொட்ட தென்வடலாய் மதில் சுவர் கண்டுள்ளது என்றால் சரிதான். ந.பு.எ.460/4 க்கு மேபுறமும் மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான்.

11. ந.பு.எ.460/4 க்கு அகலம் 3.6 கிழமேல் நீளம் என்று குறிப்பிட்டுள்ளது

ஒப்பம்/– (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.,

என்றால் தவறாகும். நீ.ம.ச.ஆ.1 நிள அளவையரின் வரைபடம் தவறாகும். தார் ரோட்டை ஆக்கிரமிப்பு செய்து கிழபுறத்தில் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. ந.பு.எ.460/6, ந.பு.எ.460/ 7 க்கு இடையில் பொதுவாக 2 மீட்டர் அளவுள்ள பொது சந்து உள்ளது அதை நிள அளவையர் குறிப்பிடவில்லை. மேற்கண்ட விபரங்களை பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறம் கிழமேலாக புதியதாக கட்டிய மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கு கிழக்குப் பார்த்த வாசல் தென்வடல் தார்ரோட்டில் இறங்கும் என்றால் சரிதான்.

12. பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட ந.பு.எ.460/4 ல் தான் அவர்களது மதில் சுவர் உள்ளது என்றும், அவர்களுக்குப் பாத்தியப்பட்ட மதில் சுவர் வரை எங்களது வீட்டை ஒட்டி எழுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. எங்களது சொத்திற்கு மேபுறம் சந்து விடவில்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/– (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.,